2011 பிப்ரவரி 8]

செல்வதைப்போல 1, 2, 3 என்ற நிலையிலே 3 இடங்களிலே மட்டும் நிறுத்திச் சென்றுகொண்டிருக்கிறார்கள். இடையில் இருக்கின்ற ஊர்களுக்குப் பேருந்துகள் விடவேண்டும் என்பதற்காக, நகரப் பேருந்துகள் விடப்பட்டிருக்கின்றன. எனவே, அதையும் நீங்கள் குறித்துக் கொடுத்தீர்கள் என்றால், அந்தப் பகுதியிலே நகரப் பேருந்தை இயக்குவதற்கு இந்த அரசு முயற்சி எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 24, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

24—

கலைஞர் காப்பீட்டுத் திட்டம்

***118500—திரு. சி. ஞானசேகரன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கலைஞர் காப்பீட்டுத் திட்டத்தில் வேலூரில் உள்ள சி.எம்.சி. மருத்துவமனையைச் சேர்க்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வேலூர் மாவட்டத்தில் உள்ள சி.எம்.சி. மருத்துவமனை, உயிர் காக்கும் உயர் சிகிச்சைக்கான முதல்வர் கலைஞரின் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ், 8-3-2010 முதல் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனைகளின் பட்டியலில் ஏற்கெனவே சேர்க்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் மாவட்டத்தில், இருதய அறுவை சிகிச்சை, சிறுநீரக அறுவை சிகிச்சை போன்ற சிகிச்சைகள் செய்யவேண்டுமென்று சொன்னால், தலைசிறந்த

மருத்துவமனையாக, உலகப் புகழ்பெற்ற மருத்துவமனையாக விளங்குவது சி.எம்.சி. மருத்துவமனையாகும். முதலிலே கலைஞர் காப்பீட்டுத் திட்டம் அந்த மருத்துவமனைக்குக் கொண்டுவரப்படாத காரணத்தினாலே நானும், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களும், தொடர்ந்து மாண்புமிகு முதல்வர் அவர்களிடமும், மாண்புமிகு துணை முதல்வர் அவர்களிடமும் வலியுறுத்தி அது பட்டியலில் சேர்க்கப்பட்டுவிட்டது. சேர்க்கப்பட்டதற்காக எங்கள் நெஞ்சார்ந்த நன்றிகளை மாவட்ட மக்கள் சார்பாக நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கலைஞர் காப்பீட்டுத் திட்டத்தில், இப்போது இருதய அறுவை சிசிச்சை என்றாலும் சரி, அதேபோல kidney transplantation சிகிச்சை என்று வருகின்றபோது, ரூபாய் இரண்டு இலட்சம், ரூபாய் மூன்று இலட்சம் என்று அதிகமாகச் செலவாகிறது. நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய பெயரால் தொடங்கப்பட்டு மிகச் செம்மையாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற கலைஞர் உயிர் காக்கும் திட்டத்தின்கீழ் பார்ப்போம் என்று சொன்னால், குடும்பத்திற்கு ஒரு இலட்சம் ரூபாய் என்று வழங்குவதற்கான வழிவகையைத்தான் இந்த அரசு செய்திருக்கிறது. ஆகவே, அந்தத் தனியார் மருத்துவமனைகள் இருதய அறுவை சிகிச்சை என்று சொன்னாலும் சரி, அதேபோல சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை என்று சொன்னாலும் சரி, அதற்கு அதிகமான பணம் தேவைப்படுகின்ற காரணத்தினாலே பல ஏழை நோயாளிகள் தங்களுக்கான அறுவை சிகிச்சையை அங்கே செய்துகொள்ள முடியாத நிலை இருந்துகொண்டிருக்கிறது.

முற்பகல் 10-10

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடமும், மாண்புமிகு துணை முதல்வரிடமும் ஒப்புதல் பெற்று—நாம் premium நிறைய கட்டுகிறோம். பாதிக்கப்படுகிறவர்களில் ஒரு சிலர்தான் insurance மூலமாக claim செய்கிறார்கள். அப்படி இருக்கிறபோது—இருதய அறுவை சிகிச்சைக்கும், அதேபோல kidney transplantation-க்கும் எவ்வளவு தொகை செலவானாலும் அதை அரசே ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு சூழலை உருவாக்கி அந்த ஏழையெளிய நோயாளிகளைக் காப்பாற்றுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

2011 பிப்ரவரி 8]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் சி.எம்.சி. மருத்துவமனையில் மட்டும் 2,482 நபர்களுக்கு 7 கோடியே 25 இலட்சம் ரூபாய் செலவில் சிகிச்சை அளிக்கப்பட்டுவிட்டது. ஒட்டுமொத்தமாக வேலூர் மாவட்டத்தில் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை உள்பட 12 மருத்துவமனைகளில் இதுவரை 5,308 நபர்களுக்கு 12 கோடியே 59 இலட்சம் ரூபாய் செலவில் அறுவை சிகிச்சைகள் செய்யப்பட்டிருக்கின்றன.*

அதேபோல, தமிழகம் முழுவதும் இந்தத் திட்டத்தின்மூலமாக இருதய நோய் அறுவை சிகிச்சைக்காக 23 ஆயிரத்து 767 நபர்களுக்கு இங்கே கலைஞர் காப்பீட்டுத் திட்டத்தின்மூலமாக ஒரு இலட்சம் ரூபாய் வரையில் செலவு செய்யப்பட்டிருக்கிறது. அறுவை சிகிச்சைகள் செய்திருக்கிறார்கள். இதுபோன்று மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கைப்படி, இருதய நோய் அறுவை சிகிச்சைக்கு அதிகமாக செலவு செய்யக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டால் அதற்கு அந்தக் காப்பீட்டு நிறுவனம் அதிகபட்சமாக 1½ இலட்சம் ரூபாய் அளவுக்கு இருதய அறுவை சிகிச்சைக்குக் கொடுக்கிறது. இந்தத் திட்டத்திலே மருத்துவமனை இணைக்கப்படவேண்டும் என்பது condition. *ஒரு இலட்ச ரூபாய் வரை அறுவை சிகிச்சை செய்வதற்கு அனைத்து மருத்துவமனைகளையும் வற்புறுத்தி அவர்கள் ஒப்புதல் தந்ததன் அடிப்படையிலே அவர்கள் இணைக்கப்பட்டு ஒரு இலட்சம் ரூபாய் வரையில் நாங்கள் அறுவை சிகிச்சை செய்கிறோம் என்று அவர்களால் உறுதி அளிக்கப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையிலே இருதய அறுவை சிகிச்சை, கிட்னி மாற்று அறுவை சிகிச்சை போன்றவை எல்லாம் செய்துகொண்டிருக்கிறார்கள்.*

அதேபோல, சில நோய்களுக்குச் செலவு கூடுதலாகின்றபோது ஒன்றரை இலட்சம் ரூபாய் வரையில் அந்த நிறுவனமே கூடுதலாக அவர்களுக்குத் தருகின்றது. இந்தச் சிகிச்சையைப் பொறுத்தவரையில் தமிழகத்திலே இதுவரை 2 இலட்சத்து 73 ஆயிரத்து 537 நபர்களுக்கு, நேற்று வரையில் இலவசமாக அறுவை சிகிச்சை செய்யப்பட்டிருக்கிறது. இதற்குச் செலவிடப்பட்ட தொகை 710 கோடியே 82 இலட்சம் ரூபாய்.

[2011 பிப்ரவரி 8

இப்படி 2 இலட்சத்து 73 ஆயிரத்து 537 நபர்கள் இந்தத் திட்டத்திலே பயன் பெற்றிருக்கிறார்கள் என்றால், கலைஞர் அவர்களுடைய கருணையால் இந்தத் திட்டம் துவக்கப்பட்டு ஏழையெளிய மக்கள் காப்பாற்றப்பட்டிருக்கிறார்கள் என்ற செய்தியை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்றால், நோய்க்குச் சிகிச்சை பெற முடியாமல் இறக்கக்கூடியவர்கள் அதிகமாக இருந்ததால்தான், இந்தத் திட்டம் தொடங்கப்பட்டது. கடந்த காலங்களில் முதலமைச்சர் நிதி, பிரதம அமைச்சர் நிதி என்று 25 ஆயிரம் ரூபாய் பெறுவதற்கு சான்றிதழ் வாங்கி சட்டமன்ற உறுப்பினர்களுடைய பரிந்துரையை வைத்துக் கொண்டு நோயாளிகள் அலைந்த காலம் அப்போது. இப்போது எல்லாம் அதுபோல் இல்லை. இப்போது 2 வருட காலமாக, இந்தத் திட்டம் துவக்கப்பட்டதிலிருந்து கிட்டத்தட்ட ஒரு கோடியே 30 இலட்சம் குடும்பங்களுக்கு Smart Card என்கிற அந்தக் கார்டுகள் வழங்கப்பட்டிருக்கின்றன. அந்தக் கார்டு இல்லாதவர்கள் தங்களுடைய ஆண்டு வருமானம் 72 ஆயிரம் ரூபாய்தான் என்று கிராம நிருவாக அலுவலரிடமிருந்து ஒரு சான்றிதழ் பெற்றுக் கொண்டு சென்றால், அவர்கள் நேரடியாக கலைஞர் காப்பீட்டுத் திட்டத்தில் இலவசமாகத் தனியார் மருத்துவமனைகளில் அறுவை சிகிச்சை செய்துகொள்ளலாம். எப்படி Bank ATM Card கொண்டு போனால், அந்த இயந்திரம் பணம் கொடுக்கிறதோ அதைப்போல, கலைஞர் காப்பீட்டுத் திட்ட கார்டு எடுத்துக்கொண்டு போனால் ஒரு இலட்ச ரூபாய் வரையில் சிகிச்சை பெறலாம் என்ற நம்பிக்கை மக்கள் மத்தியிலே வருகிற காரணத்தால் (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் திட்டத்தை மக்கள் எல்லோரும், கிராமங்கள் முழுவதும் அனைவரும் பாராட்டுகிறார்கள்; வாழ்த்துகிறார்கள்; கலைஞர் அவர்களை வாழ்த்துகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நீண்டதொரு விளக்கத்தை அளித்திருக்கிறார்கள். இன்று தமிழ்நாட்டு மக்கள் கலைஞரை நெஞ்சார வாழ்த்திக் கொண்டிருப்பதை நாங்கள் கண்கூடாகப் பார்க்கிறோம். அப்படி இருக்கிறபோது நான் வைக்கக்கூடிய கோரிக்கை Star Health Insurance கம்பெனியினர் ஒரு இலட்சம் ரூபாய் வரைதான் ஏற்றுக்கொள்கிறார்கள்.

2011 பிப்ரவரி 8]

சில நேரங்களிலே மீதித் தொகையை நீங்கள் செலுத்த வேண்டும் என்று அந்த நோயாளிகளிடம் கேட்கக்கூடிய நிலை இருக்கிறது. அதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோ, மாண்புமிகு துணை முதல்வர் அவர்களோ, தாங்களோ அந்த Star Health Insurance Company-காரர்களை அழைத்து எவ்வளவு செலவானாலும், ஏனென்றால் அதற்கு பிரீமியம் நிறைய கட்டுகிறோம். ஒரு சிலருக்குத்தான் heart operation தேவைப்படுகிறது, ஒரு சிலருக்குத்தான் kidney tansplantation operation தேவைப்படுகிறது. எனவே, கொஞ்சம் தாராள மனதோடு Star Health Insurance Company எல்லாவற்றையும் சேர்த்து முழுத் தொகையையும் ஏற்றுக்கொண்டு நோயாளிகள் மருத்துவமனைக்குப் போனவுடனேயே செய்து கொடுத்தால் இன்னும் நிறைய பேர் கலைஞரை வாழ்த்தக்கூடிய வாய்ப்பு இருக்கிற காரணத்தினால், மாண்புமிகு முதல்வர் அவர்களும், அதேபோல நம்முடைய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களும் அந்த முழுத் தொகையையும் Star Health Insurance Company-யே செலுத்துவதற்கான நடவடிக்கையை எடுப்பார்களா?

முற்பகல் *10-15*

அதுபோல், appendicitis, uterus removal அறுவை சிகிச்சைகளுக்கு அந்தத் திட்டத்தில் இப்போது வழிவகையில்லை என்று நோயாளிகளைத் திருப்பி அனுப்பிவிடுகிறார்கள். ஆற்றில் போகின்ற தண்ணீரை இன்னும் கொஞ்சம் அள்ளிக் கொடுப்பதில் தவறில்லை. ஆகவே, அந்த Star Health Insurance Company-காரர்கள் அந்த appendicitis, uterus removal அறுவை சிகிச்சைகளையும், மற்றுமுள்ள எல்லாவற்றையும் அவர்களே எடுத்துச் செய்ய இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதற்கு, நான் ஏற்கெனவே சொன்னேன். இந்தத் திட்டத்தில் ஒப்பந்தம் செய்யும்போது ரூபாய் ஒரு இலட்சம் வரை என்ற அடிப்படையிலேதான் ஒப்பந்தம் செய்யப்பட்டு, அதனைச் செய்துகொண்டிருக்கிறார்கள். அதேபோல்,

[2011 பிப்ரவரி 8

இருதய அறுவை சிகிச்சையையும் ரூபாய் ஒரு இலட்சம் வரையில் அதற்குரிய மருத்துவமனைகளில் செய்துகொண்டிருக்கின்றார்கள். இதயம் சம்பந்தப்பட்ட நோய்க்கான சிகிச்சை எடுக்கும்போது கூடுதல் செலவாகும்போது ஒன்றரை இலட்சம் ரூபாய் வரை அனுமதி அளிக்கின்றனர். அந்த விதிமுறைகளுக்கு உட்பட்டு அவர்கள் அந்தச் செலவுக் கணக்கினைச் சரிபார்த்து, மருத்துவமனை கோரிக்கை கொடுத்தால், அதனையும் அவர்கள் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று சொல்லி, இப்போது அவர்கள் அதை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். தற்போது அதில் ரூபாய் ஒன்றரை இலட்சம் வரை அவர்கள் அதிகமாக அனுமதி அளிக்கின்றார்கள்.

அதுபோல், கர்ப்பப் பை அகற்றுகின்ற அந்தச் சிகிச்சையைப் பொறுத்தவரையில் அது ஒப்பந்தப் பட்டியலின்படியான 51 வகையான நோய்களில் இணைக்கப்படவில்லை. ஏனென்றால், அதற்கென்று ஒரு சில விதிமுறைகள் இருக்கின்றன. கர்ப்பப் பை அகற்றுவது என்று சொன்னால், எல்லோரும் அகற்றிவிடுவார்கள். இன்றையதினம் காப்பீட்டுத் திட்டத்தின்மூலம் அறுவை சிகிச்சை செய்யவேண்டும் என்று சொன்னால், அதிலும் நோயாளிக்கு 40 வயதிற்கு மேல் இருக்க வேண்டுமென்றும், அங்கீகாரம் பெற்ற மருத்துவமனையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட பின், அந்த நிறுவனம் செய்யவேண்டும் என்றும் வற்புறுத்தியதன் அடிப்படையில் இதுவரை ஒப்பந்த அடிப்படை இல்லாமல் ரூ.25 கோடிக்கு மேல் செலவு செய்துள்ளார்கள். கர்ப்பப் பை அகற்றுவது குறித்த சிகிச்சையைக் காப்பீட்டுத் திட்டத்தின் மூலமாக இப்போது செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள் சொன்னதுபோல, சப்தமில்லாமல் நடக்கின்ற ஒரு சமூகப் புரட்சிக்கு இந்தக் கலைஞர் காப்பீட்டுத் திட்டம் வித்திட்டிருக்கின்றது என்பதில் மாற்றுக் கருத்து உள்ளவர்கள்கூட மறுக்கமுடியாது என்பது மிகப் பெரிய உண்மை. ஆனால், அந்தத் திட்டத்தினைச் செயல்படுத்துகின்ற தளங்களில் சில சிரமங்களை பொதுமக்கள் அனுபவித்துக்கொண்டு வருகிறார்கள். அதிலும், குறிப்பாக கலைஞர் காப்பீட்டுத் திட்டத்தின்மூலம் இருதய மாற்று அறுவை சிகிச்சை,

2011 பிப்ரவரி 8]

சிறுநீரக மாற்று அறுவை சிகிக்சைக்குப் போகிறவர்களுக்கு உடனடியாக அந்த மருத்துவமனைகள் சிகிச்சை அளிக்க முன்வருவதில்லை. அவசரமாகப் போகின்றவர்களிடம், நீங்கள் இதற்கு உடனடியாகப் பணம் கட்டிவிட்டால் நாங்கள் உடனடியாக அறுவை சிகிச்சை செய்வோம். அவ்வாறு இல்லாமல் கலைஞர் காப்பீட்டுத் திட்டத்தில் சிகிச்சையினைச் செய்யவேண்டும் என்று சொன்னால் 15 நாட்கள், 20 நாட்களுக்கு மேல் ஆகும் என்று என்னிடமே ஒரு புகார் கொடுக்கப்பட்டு, நானே மதுரையில் ஒரு குறிப்பிட்ட மருத்துவமனையில் உள்ளவர்களைக் கூப்பிட்டுப் பேசி, இது அவசரமானது, உடனடியாகச் செய்து கொடுக்க வேண்டும் என்று நான் வலியுறுத்தினேன். நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கலைஞர் காப்பீட்டுத் திட்டத்தின்மூலம் பதிவு செய்யப்பட்ட மருத்துவமனைகள் அந்த மருத்துவமனையில் பதிவு செய்த நோயாளிகளுக்கு இந்தக் கால வரம்பிற்குள் சிகிச்சை அளிக்கப்பட வேண்டும் என்கிற அறிவுறுத்தலை வழங்க முன்வருவார்களா என்று அறிய ஆசைப்படுகிறேன்.

இப்போது பட்ஜெட் ஏர்லைன்ஸ் என்று சொல்கிறோம். முன்பெல்லாம் விமானங்களிலே வசதியானவர்கள் மட்டுமே பறந்தார்கள். ஆனால், இப்போது நடுத்தட்டு மக்கள், அடித்தட்டு மக்கள் பறப்பதற்காக, மிகக் குறைந்த விமானக் கட்டணத்திலே பறக்கின்ற விமானங்களை பட்ஜெட் ஏர்லைன்ஸ் என்று அழைக்கின்றோம். அதைப்போல, பட்ஜெட் ஹாஸ்பிட்டல்ஸ், அந்தச் சாதாரண மக்களும் பயன்படக்கூடிய அளவிற்கு சிகிச்சை பெறக்கூடிய அளவிற்குக் குறைந்த செலவிலே அந்தச் சிகிச்சையினைத் தரக்கூடிய மருத்துவமனைகளை உருவாக்குவதற்கு அரசு ஏதேனும் சிறப்பு முயற்சிகளை எடுக்க முன்வருமா? நம்முடைய தமிழ்நாடு அரசு தொழில் முதலீட்டுக் கழகம் - TIIC- போன்ற நிறுவனங்களின்மூலம், அதைப்போன்று முன்வருகின்ற இளம் டாக்டர்களுக்கு ஊக்கம் அளிக்கின்ற வகையிலே, பட்ஜெட் ஹாஸ்பிட்டல்களை உருவாக்குவதற்கு அரசு ஏதேனும் திட்டம் வைத்திருக்கின்றதா? அவர்களை ஆதரிப்பதற்கு, அவர்களை ஊக்குவிப்பதற்கு இந்தக் கலைஞர் காப்பீட்டுத் திட்டம் வழிவகுக்குமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

[2011 பிப்ரவரி 8

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சில செய்திகளை, சில ஆலோசனைகளைக் கூறியுள்ளார்கள். இதுகுறித்துச் சொன்னால், தனியார்களை இந்த அரசு கைதூக்கிவிடுகின்றது என்று குற்றச்சாட்டாக சில அரசியல் கட்சியினர் பேசுகின்றார்கள். இந்தத் திட்டத்தினைப் பொறுத்தவரையில், சில அரசு மருத்துவமனைகளில் அளிக்கின்ற சிகிச்சைகள், உயிர் காக்கின்ற சிகிச்சைகளுக்கு வருவோர் எண்ணிக்கை அதிகமாக இருக்கின்றபோது, சீனியாரிட்டி அடிப்படையில், வரிசைக்கிரமமாக அறுவை சிகிச்சை செய்கின்ற காரணத்தினாலே அந்தக் குறிப்பிட்ட காலத்திற்குள் அவர்களின் உயிரைக் காப்பாற்ற முடியவில்லை என்கின்ற காரணத்தினாலேதான் மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்தத் திட்டத்தைத் துவக்க வேண்டும் என்று அனுமதித்தார்கள். அதன் அடிப்படையில் சில தனியார் மருத்துவமனைகளில் இந்தத் திட்டத்தைத் இணைக்க வைத்து, அதன் மூலமாகக் குறைந்த செலவில் அறுவை சிகிச்சை செய்கின்ற திட்டத்தினை, நாங்களும் மாவட்டந்தோறும் சென்று அங்குள்ள தனியார் மருத்துவமனைகளில் உள்ள மருத்துவர்களை அழைத்து இந்தத் திட்டத்தினைச் செய்ய வேண்டும் என்று ஆரம்ப கட்டத்தில் வலியுறுத்தி, கட்டாயப்படுத்தி, நிர்ப்பந்தப்படுத்தியதனால்தான் இப்போது பயன்பெற்றோர் எண்ணிக்கை அதிகமாகி இருக்கின்றது.

முற்பகல் 10-20

சில அறுவை சிகிச்சைகளைப் பொறுத்தவரையில் ஒரு சில குறிப்பிட்ட மருத்துவமனைகள்தான் செய்ய முடியும். கிட்னி மாற்று அறுவை சிகிச்சை என்றால் குறிப்பிட்ட மருத்துவமனைகளில், அதிகமாகக் கருவிகள் உள்ள மருத்துவமனைகளில்தான் செய்ய முடியும். அதனால் எண்ணிக்கை அதிகமாக ஆகும்போது, அதனுடைய வரிசை எண் அதிகமாகின்ற காரணத்தால், தனியார் மருத்துவமனைகளில் செய்வதற்குத் தயங்குகிறார்கள். இப்போது மீண்டும் அவர்களை அழைத்துப் பேசி, இந்தக் காலக்கட்டத்திற்குள் செய்ய வேண்டுமென்று வற்புறுத்தப்பட்டிருக்கிறது. அவர்களும் செய்துகொண்டிருக்கிறார்கள். தினந்தோறும் 650-இலிருந்து 700 நோயாளிகள் இந்தத் திட்டத்தின்மூலமாக சிகிச்சை பெற்றுக்கொண்டிருக்கிறார்கள்.

2011 பிப்ரவரி 8]

மாண்புமிகு உறுப்பினர் ஒரு கருத்தைக் கூறினார்கள். இருதய அறுவை சிகிச்சை என்றால் சென்னை, திருச்சி அல்லது கோயம்புத்தூர் என்று இருந்தது. பரவலாக மாவட்டந்தோறும் இந்த மருத்துவ வசதிகள் இந்தத் திட்டத்தின்மூலமாக விரிவுபடுத்தப்பட்டுள்ளன. கடலூரில் இந்தத் திட்டத்தின்மூலம் செய்வார்கள். அதுபோல தஞ்சாவூரில் செய்கிறார்கள். தனியார் மருத்துவமனைகளை இந்தத் திட்டத்தின் மூலமாக விரிவாக்கக்கூடிய ஒரு வாய்ப்பு இருக்கிறது. அதற்கென்று கடன் எதுவும் தரவேண்டியதில்லை. அந்த மருத்துவர்களே செய்துகொண்டிருக்கிறார்கள். இருதய அறுவை சிகிச்சை என்றால் சென்னைக்கு வரக்கூடிய சூழ்நிலை இருந்தது. இப்போது திருச்சியில் செய்கிறார்கள். தஞ்சாவூரில் செய்கிறார்கள். மாவட்டந்தோறும் பிற்காலத்தில் வரக்கூடிய வாய்ப்புகள் இதனால் உருவாக்கப்பட இருக்கின்றன. இந்தத் திட்டத்தின்மூலமாகப் பல புரட்சிகளைச் செய்துகொண்டிருக்கின்றோம். இந்தத் திட்டத்தில் இருதய நோய் மட்டுமல்ல, எலும்பு முறிவு சிகிச்சையும் அளிக்கப்படுகிறது. இருதய நோய் சம்பந்தமாக 23,767 நபர்களும், எலும்பு முறிவு சிகிச்சைக்காக 56,484 நபர்களும், சிறுநீரக சிகிச்சைக்காக 30,988 நபர்களும், நரம்பியல் சிகிச்சைக்காக 16,473 நபர்களும் பயன் அடைந்துள்ளார்கள். புற்றுநோய் சிகிக்சைக்காக 48,098 நபர்களும் இந்தத் திட்டத்தின்மூலம் பயன் பெற்றுள்ளார்கள் என்ற செய்தியை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 25, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன், மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

25—

TRUTH வாய்மையே வெல்லும் ALONE TRIUMPHS

தரம் உயர்த்துதல்

***106576—திரு. கே. உலகநாதன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்துறைப்பூண்டி தொகுதி, கோட்டூர் கால்நடை மருந்தகத்தை மருத்துவமனையாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?